# ஊவா சமூக வானொலி : ஒரு வரலாற்றுப் பார்வை

**கனகேஸ்வரி, பா., யூட் டினேஸ் கொடுதோர்,சூ., பூங்குழலி, சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
balakanagesh09@gmail.com

*இலங்கையில் சமூக வானொலிகள் பல தோற்றம் பெற்ற போதிலும் அவற்றின் நிலைத்திருப்பு என்பது கேள்விக்குறியாகவே இருந்துள்ளது. வெகுஜன ஊடகங்கள் வெளிக் கொண்டு வராத பிரச்சினைகளை மலையகத்தில் பின்தள்ளப்பட்ட மக்களின் குரல்களின் மூலம் வெளிக்கொண்டு வருவதற்காக சமூக வானொலியின் அவசியம் உணரப்பட்டது. சமூக வானொலியாக ஊவா மாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஊவா சமூக வானொலியின் வரலாற்றையும், வளர்ச்சிக் கட்டங்களையும் இவ் ஆய்வு ஆராய்ந்துள்ளது. ஒடுக்கப்பட்ட மலையக மக்களின் குரல்களை வெளிக்கொண்டு வரும் முழுமையான சமூக வானொலியாக ஊவா சமூக வானொலி செயற்படுகிறதா என்பதைக் கண்டறிவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஊவா சமூக வானொலியின் வரலாற்றுப் பின்னணி என்ன? ஊவா சமூக வானொலியின் வளர்ச்சிக் காலக்கட்டங்கள் எவை? ஊவா சமூக வானொலி ஓர் சமூக வானொலிக்கான பண்புகளைக் கொண்டுள்ளதா? ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகளில் எவ்வாறான சமூக வானொலிக்கான பண்புகள் காணப்படுகின்றன? சமூக வானொலியின் பண்புகளாக அடையாளப்படுத்தப்பட்ட பண்புகள் ஊவா சமூக வானொலியில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன? சமூக வானொலி என்ற ரீதியில் ஊவா சமூக வானொலியின் சவால்கள் எவை? போன்றவை ஆய்வாளரினால் முன்வைக்கப்பட்ட ஆய்வு வினாக்களாக அமைகின்றன. இந்த ஆய்வானது குரலற்ற மக்களின் குரலாக அமைதல், இலாப நோக்கமற்று செயற்படுதல், உள்ளூர் மொழி மற்றும் அடையாளத்தை வெளிப்படுத்துதல், பல்வேறு சமூக நிகழ்ச்சிகளைக் கொண்டிருத்தல், சிறுபான்மைக் குழுக்களுக்கு இடமளித்தல், சமூகத்தின் கல்வி அறிவை மேம்படுத்தல், நல்லாட்சியை ஊக்குவித்தல், உள்ளூர் கலாசாரத்தை வெளிப்படுத்தல், உள்ளூர் அபிவிருத்தியில் பங்கு வகித்தல், சுயாதீனமாக இயங்குதல் ஆகிய பத்து பண்புகளை செயற்பாட்டு வரன்முறைகளாகக் கொண்டு பெறுதிசார் மற்றும் எண்சார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. முதல் நிலைத் தரவு திரட்டலுக்காக ஆய்வாளரினால் தொடர்ச்சியாக இரண்டு வாரங்கள் ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சி உள்ளடக்கங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், ஆய்வின் நோக்கம் கருதி ஊவா சமூக வானொலியில் தொழில் புரியும் ஐவரிடமும், எளிய எழுந்தமான மாதிரி மூலம் இரண்டு வானொலி நேயர்களிடமும் பொதுமைப்படுத்தப்பட்ட வினாக்களைக் கொண்டு நேர்காணல் மேற் கொள்ளப்பட்டது. நூல்கள், இணையத்தளத் தரவுகள், ஆய்வறிக்கைகள் ஆகியன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவுகளாக ஊவா சமூக வானொலி யுனெஸ்கோ அமைப்பின் உதவியுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ஊவா மாகாண சபையின் அனுமதியின் கீழ் தோற்றம் பெற்றது. முதல் பத்து வருடங்கள் முழுமையான சமூக வானொலியாக செயற்பட்டு 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமூக வானொலி என்ற பண்பிலிருந்து விலகி செயற்படுகின்றது என்பது*